# யார் மனிதனைப் படைத்தது?

## அறிமுகம்

“சலவைக் கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் சகதியினாலும் உரத்தினாலும் கட்டப்பட்டவையல்ல. அவை கட்டடக்கலைஞரின் கைவண்ணத்தாலும் விலையேறப்பெற்ற பொருள்களினாலும் சிந்தனைத் திறத்தாலும் திறம்பட எழுப்பப்பட்டவையாகும்” என்று யாரோ ஒருவர் கூறினார்.

மனிதர்கள் பிரமிக்கத்தக்கவர்களாகவும், மென்மையானவர்களாகவும் படைக்கப்பட்டிருக்கிறார்கள். கிறிஸ்துவர்களுடைய புனித வேதாகமத்தில் 139:14-ஆம் வசனத்தில், “நான் பிரமிக்கத்தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மைத் துதிப்பேன்; உமது கிரியைகள் அதிசயமானவைகள். அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும்.” இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது. இந்த அதிசயத்தைப் பார்க்கும்போது ஒரு மனிதனைப் படைப்பதற்கு எத்தனை பெரிய முழு நிறைவான ஆயத்தங்கள் மேற்கொண்டிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒரு கட்டடக்கலை வல்லுனர் என்று வைத்துக்கொள்வோம். நீங்கள் ஒரு அழகிய கட்டடத்தை எழுப்புகிறீர்கள். பொறுப்பை முழுவதும் எற்றுக்கொள்வதற்கு முன்னால் உங்களிடம் போதுமான பணம் உங்களிடம் உள்ளதா? என்பதை நீங்கள் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். புளு பிரிண்ட் எனப்படும் கட்டடத்தொடர்பான வரைபடம் மற்றும் எல்லாப்பொருள்களும், மண்வாரும் இயந்திரம், பணியாட்கள், தண்ணீர், மின்சாரம், எரிவாயு இணைப்புகள் இன்னும் பல.

- ❑ **வெடிப்பு என்றால் என்ன?**

சில விதமான வெடிகளைப்பற்றி நான் கூறவில்லை. முன்பாக திட்டம் தீட்டி கட்டுப்பாட்டுக்குள் அடங்கிய வெடிகள் போன்றவை ஒரு புத்திக் கூர்மையுள்ள மனிதன் ஒருவரால் திட்டம் தீட்டப்பட்ட ஒன்றாகும். எல்லாம் ஆயத்தமான் பிறகு, வெடியைப் பயன்படுத்தி தரையை சமனப்படுத்துதல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டும். பணிகளை தொடங்குவற்கு முன்னால், உறுதியான அடித்தளம் அமைக்கப்படல் வேண்டும். வெடியினால் மட்டும் தானாகவே வாழ்க்கையைதர முடியாது. ஆதாரமாகவும் இருக்க முடியாது. ஆரம்பப் பணிகளை தொடருவதற்கு உதவியாக இருக்க முடியும். வாழ்வதற்குத் தேவையான அடிப்படை வசதிகளை அளிக்காவிட்டால், முச்சுத் திணறிலினால் படைக்கப்பட்டவன் மரிக்கக்கூடும். இதனை நீங்கள் எற்றுக்கொள்கிறீர்களா?



- ❑ **உயிர் வாழ்வதற்கு தேவையான அடிப்படை வசதிகள் என்ன?**

அவன் தங்கியிருக்க ஒர் இடம். பார்ப்பதற்கு வெளிச்சம், சுவாசிப்பதற்கு காற்று, குடிப்பதற்குதண்ணீர், அமைதியான சூழல், தோழமை, உணவு, குடும்பம், நண்பர்கள், சமுதாயம் இன்னும் பல, மகிழ்ச்சியோடும் சமாதானத்தோடும் வாழ்வதற்கு ஒருவருக்கொருவர் அணுக்கமான முறையில் தொடர்பு கொள்ள இவை அவசியமாகிறது.

படைப்புத் தொழிலை கிறிஸ்துவர்களின் புனித வேதாகமத்தின் முதலிரண்டு அதிகாரங்களை நான் நன்கு அலசிப்பார்த்தபோது நான் சில அதிசயங்களைக் கண்டேன். எல்லாவிதமான ஆயத்தப்பணிகளையும் தொடங்கியபிறகு தேவன் முதல் மனிதனைப் படைத்தார். இந்த அதிகாரங்களைப் படிப்பது மிகவும் நன்மை பயக்கும். மெய்யாகவே நீங்களும் வியப்படைவீர்கள்.

- ❑ **எவ்வாறு தொலைநோக்கோடும் நுண்ணறிவோடும் தேவன் மனிதனைப் படைத்தார்?** (எல்லா வசனங்களும் ஆதியாகமத்திலிருந்து {ஆதி} எடுக்கப்பட்டது)

தொடக்கத்தில் பரலோகத்தையும் பூமியையும் எவ்வாறு படைத்தார் என்பதை ஆதி. 1:1 தெளிவாகக் கூறுகிறது.

- **பரலோகம்:** எதிர்காலத்தில் மனிதன் நிரந்தரமாக தங்குமிடமாக.
- **பூலோகம்:** மனிதனின் தற்காலிக தங்குமிடமாக.

ஆதி.1:3-ம் வசனத்தில், “கர்த்தர் சொன்னார், வெளிச்சம் உண்டாகக்கடவது” என்றார், அங்கே வெளிச்சம் உண்டாயிற்று.”

- **வெளிச்சம்:** மனிதன் பார்ப்பதற்கும் மிகப்பெரிய அதிசயமான படைப்பை கண்டு மகிழ்வதற்கும். ஆதி. 1:4-5-ம் வசனங்களில், “வெளிச்சத்தை இருளிலிருந்து பிரித்தார். கர்த்தர் வெளிச்சத்தை பகலென்றும் இருளை இரவென்றும் அழைத்தார்.”
- **பகல்:** பணிசெய்வதற்கு.
- **இரவு:** ஓய்வெடுப்பதற்கு.

ஆதி.1:6-8-ம் வசனங்களில், கர்த்தர் சொன்னார், தண்ணீரின் மத்தியில் ஆகாயவிரிவு உண்டாகக்கடவது என்றும், தண்ணீரிலிருந்து தண்ணீரைப்பிரிக்கக்கடவது என்றும் கூறினார்!

- **இடம்:** சுவாசிப்பதற்கு தூய்மையான காற்றும் துணிச்சலான பணிகளை மேற்கொள்வதற்கும் படைக்கப்பட்டது.



ஆதி.1:9-10-ம் “பின்பு தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும், வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் வெட்டாந்தரைக்குப் பூமி என்றும், சேர்ந்த ஜலத்திற்குச் சமுத்திரம் என்றும் பேரிட்டார்; தேவன் அது நல்லது என்று கண்டார்.” அவனை உயிரோடு வைத்திருப்பதற்கு.

**பூமி:** அவன் தங்கியிருப்பதற்கு.

**கடல்:** அவன் மீன் பிடிப்பதற்காகவும் துணிகர செயல்களுக்காகவும்.

ஆதி.1:11-12, “அப்பொழுது தேவன்: பூமியானது புல்லையும், விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும், பூமியின்மேல் தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைத் தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. பூமியானது புல்லையும், தங்கள் ஜாதியின்படியே விதையைப் பிறப்பிக்கும் பூண்டுகளையும் தங்கள் தங்கள் ஜாதியின்படியே தங்களில் தங்கள் விதையையுடைய கனிகளைக் கொடுக்கும் விருட்சங்களையும் முளைப்பித்தது; தேவன் அது நல்லது என்று கண்டார். அது அப்படியே நடந்தது.”

**செடிகள்:** பிராணவாயுவைத் தாங்குவதற்கும், அவனுடைய எதிர்கால சந்ததியினர் உயிர்வாழ்வதற்கும் தேவையான உணவு வகைகளை வழங்குவதற்கும்.

ஆதி.1:14-19, “பின்பு தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாகக்கடவது, அவைகள் அடையாளங்களுக்காகவும் காலங்களையும் நாட்களையும் வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் இருக்கக்கடவது என்றார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கும்படிக்கு வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பகலை ஆளப் பெரிய சுடரும் இரவை ஆளச் சிறிய சுடரும் ஆகிய இரண்டு மகத்தான சுடர்களையும் நட்சத்தி ரங்களையும் உண்டாக்கினார். அவைகள் பூமியின்மேல் பிரகாசிக்கவும், பகலையும் இரவையும் ஆளவும், வெளிச்சத்துக்கும் இருளுக்கும் வித்தியாசம் உண்டாக் கவும், தேவன் அவைகளை வானம் என்கிற ஆகாய விரிவிலே வைத்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று.” அது அப்படியே நடந்தது.

**சூரியன்:** பகலில் வெளிச்சம் தரவும், பருவ காலத்திலும் பயன்படுவதற்கு.

**சந்திரனும் நட்சத்திரங்களும்:** இரவில் வெளிச்சம்-

கொடுப்பதற்காக. இதுபோன்ற எழிற்கொஞ்சும் சுற்றுச் சூழலோடு பருவ காலங்களையும் அளித்துவிளைச்சல்களை வழங்குவதின் மூலம் தேவனின் படைப்புத் தொழிலுக்கு மேலும் மெருகூட்டும்.

ஆதி.1:20-25,"பின்பு தேவன்: நீந்தும் ஜீவஜந்துக்களையும், பூமியின்மேல் வானம் என்கிற ஆகாயவிரிவிலே பறக்கும் பறவைகளையும், ஜலமானது திரளாய் ஜநிப்பிக்கக்கடவது என்றார். தேவன், மகா மச்சங்களையும் ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின்படியே திரளாய் ஜநிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும் சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவிதப்பட்சிகளையும் சிருஷ்டித்தார்; தேவன் அது நல்லது என்று கண்டார். தேவன் அவைகளை ஆசீர்வதித்து, நீங்கள் பலுகிப் பெருகி, சமுத்திர ஜலத்தை நிரப்புங்கள் என்றும், பறவைகள் பூமியில் பெருகக்கடவது என்றும் சொன்னார். சாயங்காலமும் விடியற்காலமுமாகியது. பின்பு தேவன்: பூமியானது ஜாதிஜாதியான ஜீவஜந்துக்களாகிய நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும் ஜாதிஜாதியாகப் பிறப்பிக்கக்கடவது என்றார்; அது அப்படியே ஆயிற்று. தேவன் பூமியிலுள்ள ஜாதிஜாதியான காட்டு மிருகங்களையும் ஜாதிஜாதியான நாட்டு மிருகங்களையும், பூமியில் ஊரும் பிராணிகள் எல்லாவற்றையும் உண்டாக்கினார்; தேவன் அது நல்லது என்று கண்டார்."

- **மீன்களும் பறவைகளும்:** உணவு வகைகளை முறைப்படுத்துவதற்கும் பிராணவாயு மற்றும் இதர எரிவாயு போன்றவை எதிர்பார்க்கும் ஏனைய கூட்டங்களும் மிருகங்களும் செடிகளும் ஆதாரமாய் திகழ்வதற்கும் படைத்தார். முதலில் பறவை இனங்களப் படைத்த தேவன், தொடர்ந்து முட்டைகளையும் சுழற்சி முறையில் படைத்தார்.

இவற்றைப் படித்துகொண்டு வரும்போதே, "கர்த்தர் சொன்னார்." என்ற வார்த்தையை நீங்கள் கவனித்திருப்பீர்கள். "ஆகக் கடவது", அது நடந்தது. எல்லாவற்றையும் தேவன் தமது வார்த்தையினாலேயே படைத்தார். அதுதான் அவருடைய தனித்துவம். அவராலே ஆக்கவும் முடியும் அழிக்கவும் முடியும்.

இப்போது படைப்புத் தொழில் பூர்த்தியாகிவிட்டது. அடுத்து முதல் மனிதனை படைப்பதற்கு அடுத்தக்கட்டப் பணியைத் தொடங்கினார்.

## ❑ கர்த்தர் முதல் மனிதனைப் படைத்தல்

அடிப்படை வசதிகளை எல்லா நிலையிலும் உருவாக்கிய பின்னர், நிகழ்காலத்திலும் எதிர்காலத்திலும் நிகழக்கூடிய படைப்புகளையும் தேவன் படைத்தார். தேவன் முதல்



மனிதனைப் படைத்தது அற்புதம்! அதிசயம்!

ஆதி.1:26-27, வரையுள்ள வசனங்களின்படி, கர்த்தர் சொன்னார், "பின்பு தேவன்: தமது சாயலாகவும் தமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக; அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், மிருகஜீவன்களையும், பூமியனைத்தையும், பூமியின்மேல் ஊரும் சகலப் பிராணிகளையும் ஆளக்கடவர்கள் என்றார். தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார், அவனைத் தேவசாயலாகவே சிருஷ்டித்தார், ஆணும் பெண்ணுமாக அவர்களைச் சிருஷ்டித்தார்." எனவே, மனிதனை தம்முடைய சாயலிலும் தேவன் சாயலிலும் படைத்தார்.

ஆதி.2:7-ம் வசனம், "தேவனாகிய **கர்த்தர்** மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி, ஜீவசுவாசத்தை அவன் நாசியிலே ஊதினார், மனுஷன் ஜீவாத்துமாவானான்."

- **உடல்:** பூமியில் வாழ்வதற்குமட்டுமே தகுதிபடைத்தது.

ஆத.3:19, "நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டபடியால், நீ பூமிக்குத் திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்; நீ மண்ணாயிருக்கிறாய், மண்ணுக்குத் திரும்புவாய் என்றார்."

- **ஆவி:** பூமியில் வாழ்வதற்கு உடல் தகுதி படைத்ததைப் போலவே (நித்தியத்தில்) பரலோகத்தில் வாழ்வதற்கும் தகுதிபடைத்தது.

ஆதி.2:19-ம் வசனத்தின்படி, முதல் மனிதனை, "ஆதாம்" என்றழைத்தார்.

## ❑ தேவன், ஆதாமுக்காக, ஆதாமிலிருந்தே ஒரு பெண்ணைப் படைத்தார்

ஆதி.2:18, 21-25, 3:20, ஆண்டவராகிய தேவன் சொன்னார், 18."பின்பு தேவனாகிய **கர்த்தர்**: மனுஷன் தனிமையாயிருப்பது நல்லதல்ல, ஏற்ற துணையை அவனுக்கு உண்டாக்குவேன் என்றார்.

21-25.அப்பொழுது தேவனாகிய **கர்த்தர்** ஆதாமுக்கு அயர்ந்த நித்திரையை வரப்பண்ணினார், அவன் நித்திரையடைந்தான்; அவர் அவன் விலா எலும்புகளில் ஒன்றை எடுத்து, அந்த இடத்தைச் சதையினால் அடைத்தார். தேவனாகிய **கர்த்தர்** தாம் மனுஷனில் எடுத்த விலா எலும்பை மனுஷியாக உருவாக்கி, அவளை மனுஷனிடத்தில் கொண்டு வந்தார். அப்பொழுது ஆதாம்: இவள் என் எலும்பில் எலும்பும், என் மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள்; இவள் மனுஷனில் எடுக்கப்பட்டபடியினால் மனுஷி என்னப்படுவாள் என்றான். இதினிமித்தம் புருஷன் தன் தகப்பனையும் தன் தாயையும் விட்டு, தன் மனைவியோடே



இசைந்திருப்பான்; அவர்கள் ஒரே மாம்சமாயிருப்பார்கள். ஆதாமும் அவன் மனைவியுமாகிய இருவரும் நிர்வாணிகளாயிருந்தும், வெட்கப்படாதிருந்தார்கள்.

ஆதி.3:20.ஆதாம் தன் மனைவிக்கு ஏவாள் என்று பேரிட்டான்; ஏனெனில், அவள் ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயானவள்." எனவே, எல்லா மனித இனமும் ஆதாம்/ஏவாள் மூலமாகவே தோன்றியது.

- **கணவன் / மனைவி:** பூமியில், தேவன் நிறுவிய முதல் குடும்பம் (ஆதி. 2:18, 24)
- **தலைமுறை தலைமுறைதோறும் குடும்பங்களை பூமியில் நிறுவி, சந்ததியினரை பல்கிப் பெருக வைத்தார்.** (ஆதி. 1:28; 2:24)

அக்கரைக்காட்டவும் அவர் படைத்த எல்லா உயிரினங்களையும் ஆளுகை செய்யவும் ஆசீர்வதித்தார். (ஆதி. 1:28)

## ❑ தலைமுறை தலைமுறைதோறும் உயிர்வாழ்வதற்கு உத்தரவாதம்.

இந்நாளும் இனி எந்நாளும் தலைமுறை தலைமுறைதோறும் மனிதனும் அவன் சந்ததியினரும் சொகுசு வாழ்க்கை பூமியில் வாழ்வதற்கும் பல்கிப் பெருகுவதற்கும் எல்லா ஆயத்தங்களையும் தேவன் படைத்தார்.

சங்கீதம் 97:6, "வானங்கள் அவருடைய நீதியை வெளிப்படுத்துகிறது, சகல ஜனங்களும் அவருடைய மகிமையைக் காண்கிறார்கள்."

முதல் மனிதனை அதிசயமாகவும் புத்திகூர்மையுள்ளவனாகவும், அக்கரை காட்டக்கூடியவனாகவும், அன்பு செலுத்துகிறவனாகவும் தேவன் படைத்தார். எந்தவொரு சந்தேகத்திற்கும் இடமின்றி முழமையாகவே நம்பலாம். எல்லா மனித வர்க்கத்தையும் உலகிலே படைத்த ஒரே படைப்பாளியான தேவன் ஒருவர் மட்டுமே!

## ❑ நீங்கள் ஏதாவது கேட்கக்கூடும்:

இந்த உலகத்தில் ஏன் அதிகமான இனங்களும் மொழிகளும் தோன்றின? ஏனைய (தேவர்கள்) கடவுள்களைப் படைக்கவில்லையா?

மேற்கூறிய இத்தகைய வினாக்களுக்கு உங்களுக்கு விடை தெரியவேண்டுமானால், அன்புகூர்ந்து என்னைத் தொடர்புகொள்ளவும்.

82603528 என்ற எண்ணில், சங்கரன் என்பவரைத்
தொடர்புகொள்ளவும்.மின் அஞ்சல்: nedungat@gmail.com
அல்லது : www.amazingdiscoveery.net